**செய்தி வெளியீடு எண்:161** **நாள்:24.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 23.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் 29 கோடியே 94 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, சென்னை, அண்ணா நகரில் 17 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள தொழிலாளர் ஆணையரக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாப்பது, அமைதியான தொழில் சூழலை ஏற்படுத்துவது, தொழில்திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காக, புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை துவக்குதல், அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித் தொகை வழங்குவது, தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் பாதுகாப்பினை மேம்படுத்துவது, அமைப்புசாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு வழங்குவது போன்ற பணிகளை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை மாவட்டம், அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் 20 கோடியே 34 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய வளாக கட்டடம்;

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கத்தின் சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், துடியலூர் கிராமத்தில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அலுவலகம் மற்றும் அதன் 5 சார்நிலை அலுவலகங்கள் செயல்படும் வகையில் 14,096 சதுரடி கட்டட பரப்பளவில், 3 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் மற்றும் சார்நிலை அலுவலகக் கட்டடம்;

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், ஓரிக்கை கிராமத்தில் 2 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சட்டமுறை எடையளவு ஆய்வகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகக் கட்டடம்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம், சிப்காட் தொழிற்பூங்காவில் 2 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்;

சேலம் – மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகம் மற்றும் திருநெல்வேலி – அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகம் ஆகிய இடங்களில் 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 2 மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகக் கட்டடங்கள்;

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் 49 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்;

என மொத்தம் 29 கோடியே 94 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை மாவட்டம், அண்ணா நகரில், தொழிலாளர் ஆணையரகம் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்கள் சொந்த கட்டடத்தில் இயங்கிடும் வகையில் 17 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள தொழிலாளர் ஆணையரக வளாகக் கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், வங்கி, நிதிச்சேவைகள் மற்றும் காப்பீடு பிரிவில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான உயர்நிலை திறன் மேம்பாட்டு மையம் அமைத்திட MSE ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள சுமார் 90,000 அமைப்புசாரா ஓட்டுநர்களின் நலன் காக்க, முதற்கட்டமாக 4 கோடி ரூபாய்

மதிப்பீட்டில், 20,000 ஓட்டுநர்களுக்கு, தலா 2,000 ரூபாய் மதிப்பீட்டிலான சீருடை, ஷு, முதலுதவிப் பெட்டி மற்றும் தீயணைப்பான் ஆகிய சாதனங்கள் அடங்கிய பாதுகாப்பு பெட்டகத்தை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கு பாதுகாப்பு பெட்டகத்தை வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

குழந்தை தொழிலாளர் முறை அகற்றுவதில் சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஒவ்வொரு வருடமும் சிறந்த மாவட்ட ஆட்சியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்கு பரிசுக் கேடயம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், 2016–ஆம் ஆண்டில் குழந்தை தொழிலாளர் முறையை அகற்றுவதில் சிறப்பாக பணியாற்றியமைக்காக, முன்னாள் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும், தற்போது பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு சிறப்புச் செயலாளருமான திரு. வா. சம்பத், இ.ஆ.ப., அவர்களுக்கு சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான பரிசு கேடயத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் முனைவர் மா. வள்ளலார், இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. மு. வே. செந்தில்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**